**CCE PF**
**CCE PR**
**NSR & NSPR**

**C**

ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESHWARAM, BANGALORE – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್, 2022

**S.S.L.C. EXAMINATION, MARCH / APRIL, 2022**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

# MODEL ANSWERS

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

CODE NO. : **10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು

**Subject : First Language — TAMIL**

(ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. & ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)

**(Private Fresh & Private Repeater / NSR & NSPR)**

ದಿನಾಂಕ : 28. 03. 2022 ] [ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **125**

Date : 28. 03. 2022 ] **[ Max. Marks : 125**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுதல் :** **10 × 1 = 10**

1. செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது

(A) எதுகை (B) மோனை

(C) இயைபு (D) முரண்

*Ans.* :

(A) எதுகை

2. படித்த புத்தகம் படித்த என்பது -

(A) திரிசொல் (B) பெயரெச்சம்

(C) வினையெச்சம் (D) வினைச்சொல்

*Ans.* :

(B) பெயரெச்சம்

3. காஞ்சிபுரம் வாங்கினான்

(A) பொருளாகு பெயர் (B) இடவாகு பெயர்

(C) காலவாகு பெயர் (D) சினையாகு பெயர்

*Ans.* :

(B) இடவாகுபெயர்

4. நனியுண்டு நனி என்பது -

(A) பெயர்ச்சொல் (B) வினைச்சொல்

(C) இடைச்சொல் (D) உரிச்சொல்

*Ans.* :

(D) உரிச்சொல்

5. இரண்டு சீர்களைக் கொண்டது

(A) குறளடி (B) சிந்தடி

(C) அளவடி (D) நெடிலடி

*Ans.* :

(A) குறளடி

6. முருகன் எழுதினான்

(A) நிகழ்காலம் (B) இறந்தகாலம்

(C) எதிர்காலம் (D) வரும்காலம்

*Ans.* :

(B) இறந்தகாலம்

7. பகை நாட்டின் பசுக் கூட்டங்களை கவர்வது

(A) வெட்சி (B) கரந்தை

(C) வஞ்சி (D) காஞ்சி

*Ans.* :

(A) வெட்சி

8. தொழாஅர் இதில் வருவது

(A) உயிரளபெடை (B) ஒற்றளபெடை

(C) குற்றியலிகரம் (D) குற்றியலுகரம்

*Ans.* :

(A) உயிரளபெடை

9. ஆற்று நீர் சல சல என்று ஓடியது இதில் சலசல

(A) அடுக்குத்தொடர் (B) இரட்டைக்கிளவி

(C) பகுபதம் (D) பகாபதம்

*Ans.* :

(B) இரட்டைக் கிளவி

10. இனிமைத் தமிழ்

(A) இனிமை + தமிழ் (B) இனி + மை + தமிழ்

(C) இனி + மைதமிழ் (D) இனிப்பு + தமிழ்

*Ans.* :

(A) இனிமை + தமிழ்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புதல் 5 × 1 = 5**

11. தூறு என்பது புதர்;
புதிர் என்பது : .......................... .

*Ans.* :

தூறு என்பது புதர்;

புதிர் என்பது விடுகதை.

12. காகம் கரையும்;
சேவல் : .......................... .

*Ans.* :

காகம் கரையும்; சேவல் கூவும்.

13. தென்னங்கீற்று ;
பனை : .......................... .

*Ans.* :

தென்னங்கீற்று ; பனை ஓலை.

14. அகவலோசை உடையது ஆசிரியப்பா;
செப்பலோசை உடையது : .......................... .

*Ans.* :

அகவலோசை உடையது ஆசிரியப்பா;

செப்பலோசை உடையது வெண்பா.

15. காலம் பொன் போன்றது ;
கடமை : .......................... .

*Ans.* :

காலம் பொன் போன்றது ;

கடமை கண் போன்றது.

**III. ஒரு தொடரில் விடை தருதல் :** **8 × 1 = 8**

16. பேராறு திரவியங்களை அள்ளி வருவதற்கான உவமை யாது ?

*Ans.* :

தூதர் முகமது அவர்களின் பாதங்களை தொழுவது போல, பேராறு திரவியங்களை அள்ளி வருகிறது.

17. நீ எத்தகைய எண்ணத்தைக் கூடு என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

*Ans.* :

இந்திய நாடு என்னுடைய நாடே.

18. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள்?

*Ans.* :

'எம்மிடத்தில் எதுவுமில்லை' என்று சோம்பி இருப்பவரைக் கண்டு

19. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?

*Ans.* :

நம்மைப் பிடித்த பேய் பிசாசுகள் போயின

20. திரு.வி.க. காற்றாடிகள் என்று சொல்லுகின்ற இருவரைக் குறிப்பிடுக.

*Ans.* :

பாணர், கூத்தர்

21. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர்?

*Ans.* :

i) தனக்கென வாழ்வோர்

ii) பிறருக்கென வாழ்வோர்

22. பம்பனது சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

*Ans.* :

ஆதி கவி, புது யுகம் படைத்தோன்.

23. நாம் எப்போது சௌக்கியமாக இருக்க முடியும் என்று தென்கச்சி சுவாமிநாதன் கூறுகிறார் ?

*Ans.* :

மரம், செடி, கொடிகள், பறவைகள், விலங்குகள் சௌக்கியமாக இருந்தால் தான் நாமும் சௌக்கியமாக இருக்க முடியும்.

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருதல்** **15 × 2 = 30**

24. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

*Ans.* :

''இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தானோ'' என்று பிறர் பேசும்படி செய்வதாம்.

25. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

*Ans.* :

i) வறியவர்க்குப் பொருளைக் கொடுத்து உதவுதல் 1

ii) நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல்

iii) எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாதிருத்தல். 1

26. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது ?

*Ans.* :

உன்னை விரும்பாத ஒருத்தியை நீ வலிந்து தீண்டினால் சுக்கு நூறாகத் தலை வெடித்துச் சிதறி இறப்பாய்.

27. காளைக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

*Ans.* :

பள்ளம் மேடுள்ள பாதைகளை பார்த்து நடக்க வேண்டும். பழைய போக்கில் பயனில்லை. மூளையைப் பயன்படுத்த வேண்டும்.

28. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன?

*Ans.* :

''உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்''.

29. நீதிச்சாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

*Ans.* :

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் கிடைத்த ஓலைச் சுவடி 'நீதிச்சாரம்' 1

''மரம் வளர்த்தால் நரகம் இல்லை'' அப்படின்னு அதுலெ எழுதியிருக்கு. 1

30. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?

*Ans.* :

நகரத்தில் கிடைக்கும் கூலித்தொகையை விட கிராமத்தில் கிடைக்கும் தொகை குறைவு.

31. அடுக்குத் தொடரைச் சான்றுடன் விளக்குக.

*Ans.* :

பொருளுடைய சொற்கள் பல அடுக்கி வரும். 1

ஒரு சொல்லைத் தனியாகப் பிரித்தால் பொருள் தரும். (எ.கா.) பாம்பு, பாம்பு, பாம்பு. 1

32. அடி என்றால் என்ன ? அதன் வகைககள் யாவை ?

*Ans.* :

தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது அடி எனப்படும். 1

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும். 1

33. உரிச்சொல் என்றால் என்ன ? எ.கா. தருக.

*Ans.* :

செய்யுளுக்கு உரியதாய் வரும் சொல் உரிச்சொல். (எ.கா.) நனிபுகழ்

34. 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற புறநானூற்றுப் பாடல் எந்தக் குறளின் விளக்கமாக அமைந்துள்ளது ?

*Ans.* :

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுஇன்றேல்

மண்புக்கு மாய்வது மன்.''

35. இளைஞன் தன்னை எதைப்போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?

*Ans.* :

கழுதையில் சவாரி செய்பவன் கழுதையின் வாயருகே கேரட்டை காட்டிக் கொண்டு செல்வதைப் போல, இளைஞன் இலட்சியத்தை முன்னிறுத்திச் செல்ல வேண்டும்.

36. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக.

*Ans.* :

கால் இல்லாத கள்வன்

கால் உள்ளவனைப் பிடித்தான்

தலையில்லாதவன் அதைப் பார்த்து

கலகலவென்று சிரித்தான் - அவர்கள் யார்?

( பாம்பு - தவளை - நண்டு )

ஏதேனும் **ஒன்று** எழுதலாம்.

37. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப் பொருள் யாதென்பதற்கு கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை ?

*Ans.* :

களபம் - சந்தனம்

மாதங்கம் - பெரிய தங்கம்

வேழம் - கரும்பு

38. குழந்தைகள் எவ்வாறு பஸ்சுக்குள் போய் அடைந்ததாகக் கி. ராஜநாராயணன் கூறுகிறார்?

*Ans.* :

i) புற்றுக்குள் எறும்புகள் நுழைவது போல

ii) தீப்பெட்டிக்குள்ளே குச்சிகளை அடுக்குகிறதைப் போல.

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுதல் : $6 \times 3 = 18$**

39. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை?

*Ans.* :

i) ஆலைகள் இயங்குவதற்கும் 1

ii) அனல் மின் தயாரிக்கவும் 1

iii) சாலைகள் அமைப்பதற்கும்

iv) எண்ணிலாத் தொழிற் கூடங்கள் இயங்கவும். 1

40. தாய், தந்தை, கொல்லன், அரசன், மகன் செய்ய வேண்டிய கடமைகளாகப் பொன்முடியார் வழிநின்று விளக்குக.

*Ans.* :

i) குழந்தையைப் பெற்றெடுப்பது தாயின் கடமை

ii) சான்றோனாக வளர்ப்பது தந்தையின் கடமை

iii) போருக்கு வேல் வடிப்பது கொல்லனது கடமை

iv) மக்களை நல்லாட்சி செய்வது மன்னனது கடமை

v) வாள்முனை முறியும்படி போர் புரிதல் வீரம் மிக்க ஆண்மகனது கடமை

41. சேதுப்பிள்ளையவர்கள் 'இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்' என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விளக்குக.

*Ans.* :

மாணவிகள் தயாரித்த தயிர் வடையை உண்ட இந்தி துறை போரசிரியர் இந்த வடை எந்த விடுதியில் தயாரிக்கப்பட்டதோ! என்று கேட்ட பொழுது பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் மாணவிகளைப் பார்த்து, ''இவர்கள் கை வண்ணம் இங்கு கண்டோம்'' என்று கூறினார்.

42. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும்? அதன் விளைவு யாது?

*Ans.* :

இளைஞன் தனது பதினேழாவது வயதிலிருந்து இருபத்து நான்காவது வயதிற்குள் தன் திசை எது என்று தீர்மானித்துக் கொள்ளாவிட்டால் பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர வேண்டியிருக்கும்.

இதனால் முப்பது வயதிலே முதுமை வந்து விடும்.

43. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளில் ஒன்றினை எழுதுக.

*Ans.* :

i) பூமியின் வெப்பம் அதிகரிக்கும் போது பிரம்மாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும்.

ii) கடல் மட்டம் உயரும்

iii) பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலைமைக்கு ஆளாயிடும்.

iv) கடலோரப் பகுதிகளில் வாழ்பவர்கள் வேறு இடம் பார்க்க வேண்டி இருக்கும்.

44. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றி வணங்கும் சிறப்பினை எழுதுக.

*Ans.* :

i) ஒளியாய் விளங்கும் திருமேனி உடையவன்

ii) முதல், இடை, முடிவானவன்

iii) பேரின்பக் கடலானவன்

iv) குற்றமற்ற நலம் பொருந்திய திருவருள் குன்றானவன்.

**VI. குறிப்பு வரைதல் : 2 × 3 = 6**

45. பழமொழி நானூறு

*Ans.* :

பழமொழி நானூறு பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று. ஒவ்வொரு பாட்டிற்கும் ஒரு பழமொழி வீதம் நானூறு பழமொழிகள். வாழ்வியல் கருத்தை கூறும்.

46. கவிஞர் வைரமுத்து

*Ans.* :

கவிஞர் வைரமுத்து தமிழக அரசின் அரசவைக் கவிஞர்.
திரைப்பட பாடலாசிரியர்.
பத்மபூசன் விருது பெற்றவர்.

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

47. வேற்றுமை அணி

*Ans.* :

அணி : வேற்றுமை அணி

அணி இலக்கணம் : ஒற்றுமை உடைய இரண்டு பொருளைக் கூறி ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்துவது.

அணி (எ.கா.) : தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு.

அணி விளக்கம் : தீயும் சுடும். தீய சொல்லும் சுடும். ஒற்றுமை. தீப்புண் ஆறிவிடும். தீய சொல் ஆறாது வேற்றுமை.

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குதல் : 4 × 3 = 12**

48. ''பால் வார்த்தாலும்
விஷம் குறைக்காது பாம்பு''

*Ans.* :

இடம் : இயல்பு

பொருள் : பாலையே ஊற்றினாலும் பாம்பின் விஷம் குறையாது.

49. ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''.

*Ans.* :

இடம் : பாரதியார் பெண்கள் கும்மி பாடல்.

பொருள் : பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், இந்த உலகினில் பெண்கள் புதுமைப் பெண்களாக வாழ பாரதி கூறுகிறார்.

50. ''பாவம் கொஞ்ச நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்''.

*Ans.* :

இடம் : ஒரு செய்தி

பொருள் : தீப்பெட்டி தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்று வந்த குழந்தைகள் உறங்குவதை ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

51. ''அவர்கள் வாழ்வில் ஒருபோதும் வெறுப்பு கொள்ள மாட்டார்கள்''.

*Ans.* :

இடம் : உண்டாலம்ம இவ்வுலகம்

பொருள் : பிறருக்கென வாழ்வோர் வாழ்வில் ஒரு போதும் வெறுப்பு கொள்ள மாட்டார்கள்.

**IX. கீழ்வரும் பழமொழியை விளக்குதல் : 1 × 3 = 3**

52. ''எறும்பு ஊர கல்லும் தேயும்''.

*அல்லது*

''இறைக்க இறைக்க ஊறும் கிணறு''.

*Ans.* :

ஒருவனது விடா முயற்சியால், கடின உழைப்பால் எவ்வளவு பெரிய வெற்றியும் அடையலாம். இது எறும்பு ஊர கல்லும் தேயும் என்பது போல.

அல்லது

*Ans.* :

கிணற்றில் நீரை இறைக்க இறைக்க மேலும் மேலும் ஊறும். அதுபோல நூல்களைப் படிக்கப் படிக்க அறிவு வளரும்.

**X. அடிபிறழாமல் எழுதுதல் : 1 × 4 = 4**

53. ''இனிமைத் தமிழ் மொழி'' எனவரும் பாடல்

*அல்லது*

''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்''.

*Ans.* :

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்கும் தமிழ்மீதில். - பாரதிதாசன்

அல்லது

*Ans.* :

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உன்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே. - கூடலூர் கிழார்

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருதல் : 2 × 4 = 8**

54. நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கின்றோம்?

*Ans.* :

i) மனிதன் பிராண வாயுவை எடுத்துக் கொண்டு கார்பன்-டை-ஆக்ஸைடை வெளிவிடுகின்றான்.

ii) மரம், செடி, கொடிகள் கார்பன்-டை-ஆக்ஸைடை எடுத்துக் கொண்டு பிராணவாயுவை வெளியில் விடுகிறது.

iii) மனிதன் காடுகளை அழிக்க ஆரம்பித்து விட்டான்.

iv) தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகை.

v) பாதுகாப்பு படலமான ஓசோன் படலம் தேய்ந்து கொண்டு வருகிறது.

55. தமிழ் இதழ்களும் விடுகதைகளும் குறித்து போராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

*அல்லது*

இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

*Ans.* :

i) ஆங்கிலேயர்களின் தொடர்பால் கல்வி நிலைகளில் வளர்ச்சி நிலை.

ii) ஐரோப்பாவில் புத்துயிர் பெற்ற ''நாட்டுப்புற இயல் கல்வி'' இந்தியாவிலும் பரவலாகக் காணப்பட்டது.

iii) விடுகதைகள் பரவலாக இடம்பெற்ற காலம் 19ஆம் நூற்றாண்டு.

iv) விவேக சிந்தாமணி, கலா சிந்தாமணி, ஜன விநோதினி, செந்தமிழ் செல்வி, கலைமகள், தாமரை, ராணி, அரும்பு, தமிழரசு, கொங்கு போன்ற இதழ்கள் விடுகதை இலக்கியத்தை வளர்ந்து வந்துள்ளன.

அல்லது

*Ans.* :

இலட்சியம் பற்றி வைரமுத்து கருத்து :

i) இலட்சியமில்லா வாழ்க்கை உள்ளீடற்ற சட்டை மாதிரி.

ii) கழுதையின் வாயருகே கேரட்டை காட்டிக் கொண்டே செல்வதைப் போல இலட்சியத்தை முன்னிறுத்த வேண்டும்.

iii) பதினேழாவது வயதிலிருந்து இருபத்து நான்காவது வயதிற்குள் வாழ்வை தீர்மானித்து விட வேண்டும்.

iv) நம்மைச் சார்ந்த துறையை வாழ வைப்பதே இலட்சியம்.

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுதல் 1 × 4 = 4**

56. ''சுழன்றும் ஏர்ப் பின்னதுலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''.

*அல்லது*

''உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியிலே கலக்குது
ஒற்றுமையில்லா மனித குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது''.

*Ans.* :

i) உலகம் தானே சுற்றினாலும், உழவுத் தொழிலின் பின்னே தான் சுற்றும் உழவே தலையாய தொழில்

ii) தேவையான உணவை உழுது கொடுத்து தாமும் வாழ்பவரே வாழ்வர் மற்றவர் அவரை தொழுது அவர்பின் செல்வர்.

அல்லது

*Ans.* :

மலையிலே தோன்றும் அருவிகள் தரைக்கு வந்ததும் ஒன்றாய்க் கலக்கின்றன. மனிதகுலம் மட்டும் உயர்வும் தாழ்வும் வளர்த்து ஒற்றுமையில்லாமல் அடித்துக் கொள்கிறது.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருதல் : 2 × 2 = 4**

பாகவதமேள : பாடலும், ஆடலும் இணைந்த கூத்தினை 'பாகவத மேள' என்பர். இக் கூத்தின் தலைவன் 'பாகவதன்' என்னும் பாட்டுக்காரன் ஆவான். ஆட்டக்காரர்கள் காலில் சலங்கையும் மார்பில் மாலையும் அணிந்திருப்பர். 'கோடங்கி' என்பவன் நகைச்சுவைப் பாத்திரம் தாங்குகின்றான். இவன் தாடி, மீசை, பெரிய வயிறு, கூம்பிய தொப்பி, அதன் நடுவே பெரிய நாமம். சிவந்த ஆடை, இடுப்பில் மணிச்சரம் முதலிய ஒப்பனைகளோடு காட்சி தருகிறான். மக்கள் கோடங்கி வேடக்காரனை தெய்வமாகக் கருதி அவன் பாதங்களுக்கு வழிபாடு செய்வர். பாலலீலா, தசாவதாரம்,

இராமாயணம், அனுமன்-கருடப்போர், முதலியவற்றை பாகவதன் பாடலாகப் பாட, எதிரே நிற்கும் ஆட்டக்காரர்கள் கூத்து வடிவில் ஆடுகின்றனர்.

வினாக்கள் :

57. a) 'கோடங்கி' என்பவனின் ஒப்பனை எவ்வாறு இருக்கும்?

b) பாகவதன் கூத்தில் எவற்றைப் பாடலாகப் பாடுவான்?

*Ans.* :

a) கோடங்கி என்பவன் தாடி, மீசை, பெரிய வயிறு, கூம்பிய தொப்பி, அதன் நடுவே பெரிய நாமம், சிவந்த ஆடை, இடுப்பில் மணிச்சரம் முதலிய ஒப்பனைகளோடு காட்சி தருகிறான்.

b) பாலலீலா, தசாவதாரம், இராமாயணம், அனுமன்-கருடப்போர் முதலியவற்றை பாகவதன் பாடலாகப்பாடுவான்.

**XIV. மடல் எழுதுதல் :** **1 × 5 = 5**

58. இணைய வழியில் கல்வி கற்ற உன் அனுபவங்கள் குறித்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

*அல்லது*

நீ வாழும் பகுதியில் மருத்துவமனை வசதி செய்து தருமாறு நகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

*Ans.* :

நாள் :
இடம் :

அன்புள்ள :

மதிப்பிற்குரிய :

கடிதப் பொருள் :

இவண்

எழுதுவோர் பெயர்

பெறுவோர் முகவரி :

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுதல் : 1 × 5 = 5**

59. ''இனிய வாழ்வும்; இயற்கை மருத்துவமும்''

*அல்லது*

''சமுதாய மாற்றத்தில் மாணவர் பங்கு''

*Ans.* :

- தலைப்பிற்கேற்ற முன்னுரை
- தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள்
- கட்டுரையின் நோக்கம் நிறைவுறும் வகையில் வலியுறுத்தல்
- முடிவுரை